# இலங்கை முஸ்லிம் விவாக மற்றும் விவாகரத்து சட்ட மறுசீரமைப்பு குறித்த முஸ்லிம் சமூகத்தின் கருத்துநிலை

# PERSPECTIVES OF THE MUSLIM COMMUNITY ON SRI LANKAN MUSLIM MARRIAGE AND DIVORCE LAW REFORM

Committee for Intellectual Survey
*Faculty of Islamic Studies and Arabic Language*
*South Eastern University of Sri Lanka*

**Summary**

*The Muslim Marriage and Divorce Act No. 13 of 1951 stands as a pivotal personal law governing the familial affairs of Sri Lankan Muslims. It delineates a comprehensive legal framework encompassing marriage, divorce, polygamy, guardianship, court proceedings, and maintenance, among other facets. Over time, the evolving sentiments within the Muslim community necessitate a reevaluation of this legislative edifice. Against this backdrop, this study endeavours to scrutinize the perspectives of the Muslim populace regarding the proposed reforms to the Muslim Marriage and Divorce Act. Upon a thorough analysis of the study's findings, many favourable opinions emerge, underscoring the urgent imperative for amending the Muslim Marriage and Divorce Act of Sri Lanka. These proposed reforms entail the appointment of women as Qadis, the elimination of legal provisions at odds with Islamic shari'ah, the imposition of stringent legal prerequisites for polygamous unions, the inclusion of a provision for the woman's signature in the marriage register, the abolition of dowry-related statutes, the revision of laws encroaching upon women's rights, the safeguarding of Muslim autonomy through the Qadi court system, Passah, the provision of divorce compensation to women, the maintenance of madhaan succession, the appointment of proficient Qadis in Qadi courts, the specification of specific legal criteria for appointing women as Qadis, the consideration of legal viewpoints from other madhhabs in the reformative process, the appointment of female counsels in Qadi courts and the Council of Qadis, the limitation of unilateral authority vested in the marriage victim, typically the woman, the eradication of coerced marriages, the enforcement of mandatory marriage registration, the assurance of dowry entitlements and overdue payments in alignment with legal and Islamic principles, and the establishment of a marriageable age commensurate with contemporary standards. Furthermore, while other issues may evoke minimal contention, the proposals collectively signal a substantial consensus within the discourse.*

**அறிமுகம்**

*1951ஆம் ஆண்டின் 13ஆம் இலக்க முஸ்லிம் விவாக மற்றும் விவாகரத்துச் சட்டமானது இலங்கை முஸ்லிம்களின் குடும்ப விவகாரங்களை நிர்வகிக்கும் ஒரு முக்கிய சட்டமாகும். இது திருமணம், விவாகரத்து, பலதாரமணம், தாபரிப்பு, காழி நீதிமன்றம் மற்றும் பராமரிப்பு போன்றவற்றிக்கான சட்டக் கட்டமைப்பை வழங்குகிறது. குறித்த இச் சட்டம் கடந்த பல வருடங்களாக முஸ்லிம் சமூகத்திற்குள் மாறிவரும் கருத்துப் பிரதிபலிப்புகளுடன் சட்ட மாற்றத்திற்கான அழைப்பை வேண்டி நிற்கிறது.*

*முஸ்லிம் விவாக விவாகரத்துச் சட்டத்தை பாரம்பரிய இஸ்லாமியக் கொள்கைகளின் உருவகமாகக் கருதுபவர்கள் இலங்கை வாழ் முஸ்லிம்களின் மத அடையாளத்தைப் பாதுகாப்பதற்கும் சமூகத்திற்குள் பாரம்பரிய சட்ட விதிகளை நிலைநிறுத்துவதற்கும் குறித்த சட்டத்தின் அசல் தன்மையை பாதுகாப்பது அவசியமாக கருதுகின்றனர். மறுபுறம் பாலின சமத்துவம், மனித உரிமைகள், சமூக நலன்கள், நடைமுறை நியாயம் மற்றும் முஸ்லிம் சிறுபான்மைச் சூழலுக்கு பொருத்தமான சட்டங்கள் தொடர்பில் மேற்கோள் காட்டி வாதிடக்கூடிய மற்றய தரப்பு காணப்படுகின்றது. குறித்த இக்குழு முஸ்லிம் விவாக விவாகரத்துச் சட்டத்தில் சட்ட மாற்றங்கள் கொண்டுவரப்பட வேண்டியதன் அவசியத்தை அறிவார்ந்த அடிப்படையில் முன்வைத்து மாற்றங்களுக்கான அழுத்தங்களை மேற்கொள்ளும் தரப்பு என முஸ்லிம் சமூகம் இரண்டு பெரும் பிரிவுகளாக பிந்து காணப்படுகிறது. மேலும், அண்மைக்காலங்களில் நீதி, பாலின சமத்துவம் மற்றும் மனித கண்ணியம் ஆகியவற்றின் அடிப்படையில் முஸ்லிம் விவாக விவாகரத்து சட்டத்தில் மறுசீரமைப்பை ஏற்படுத்துவது அவசியம் என்ற கருத்தாடல்கள் முஸ்லிம் சமூகத்தில் வலுப்பெற்று வருவதை அவதானிக்க முடியும்.*

*இந்தக் கருத்தாக்கங்களின் பின்னணியில், இவ்வாய்வானது இலங்கை முஸ்லிம் விவாக விவாகரத்து சட்டம் குறித்து முஸ்லிம் சமூகத்தின் கருத்துக்களை கண்டறிய முயற்சித்துள்ளது. எனவே, இவ்வாய்வின் முடிவுகள் குறித்த முஸ்லிம் விவாக விவாகரத்து சட்டத்தில் மாற்றங்களை வேண்டிநிற்கும் பகுதிகளை அடையாளம் காணவும், அதுதொடர்பில் எவ்வாறான சட்ட மாற்றங்கள் ஏற்படுத்தப்படல் வேண்டும் போன்ற விடயங்களில் கொள்கை வகுப்பாளர்களுக்கு பயனுள்ளதாக அமையவள்ளது.*

## 1. தரவு சேகரிப்பு மற்றும் தரவுப் பகுப்பாய்வு


*இவ் வாய்வில் இலங்கையின் பல பாகங்களிலும் இருந்து தன்னார்வ அடிப்படையில் ஆய்வுமாதிரிகள் கலந்து கொண்டனர். இதற்கமைய எழுமாறு அடிப்படையில் பகிர்ந்தளிக்கப்பட்ட கூகுள் படிவங்கள் மற்றும் வினாக்கொத்துப் படிமங்கள் போன்றன நிறப்பி கையளிக்கப்பட்டது. இதில் முஸ்லிம் மதத் தலைவர்கள், காதி நீதிபதிகள், சட்டத்துறை அறிஞர்கள், வழக்கறிஞர்கள், பட்டதாரிகள், இளங்கலைமானிகள், அரச உத்தியோகத்தர்கள், சமூக ஆர்வலர்கள் மற்றும் பெண் செயற்பாட்டாளர்கள் என சமூகத்தின் பல்வேறு துறைசார்ந்தோரும் இதில் இணைத்துக் கொள்ளப்பட்டனர். இவ்வாய்வுக்குத் தேவையான தரவு திரட்டானது 3 மாத கால அளவினைக் கொண்டதாக அமைந்திருந்தது. மொத்தமாக 300 வினாக்கொத்துகள் பகிர்ந்தளிக்கப்பட்டு*

ஆய்வுகாக பயன்படுத்தப்பட முடியுமான *250* வினாக்கொத்துகள் மீளக்கிடைக்கப் பெற்றன (83%). அவை MS Excel *2019* மென்பொருள் உதவியுடன் விபரனப் பகுப்பாய்வுக்கு உட்படுத்தப்பட்டு, முடிவுகள் வரைகலை விளக்கங்களாக முன்வைக்கப்பட்டுள்ளன. இவ்வாறு தரவுகளை வழங்கியவர்களில் 58% ஆண்களும் 42% பெண்களும் காணப்படுகின்றமை இங்கு குறிப்பிடத்தக்கது.

## *1. ஆய்வு மாதிரிகளின் தனிப்பட்ட விபரங்கள்*

### *1.1. ஆய்வுப் பங்குதாரர்களின் கல்வி மட்டம்*


தரவு தருனர்களின் கல்வி மட்டத்தினை அவதானிக்கும் போது, சாதாரண தரம், உயர்தரம், டிப்ளோமா, உயர் டிப்ளோமா மற்றும் காலாநிதி பட்டங்கள் முடித்தவர்களின் பங்கேற்பு ஏனையவர்களைவ விடக் குறைவாகக் காணப்படுகிறது. மொத்தமாக எடுத்து நோக்குகையில் பல்கலைக்கழக மாணவர்களின் பங்கேற்பு அதிகமாக காணப்படுகிறது. மேலும் இதில் இளமாணிப் பட்டதாரிகளின் பிரதிநிதித்துவம் அதிகமாக காணப்படுவதுடன், எண்ணிக்கையில் மிகக் குறைந்தளவானவர்களாக முதுதத்துவமாணிகளும் காணப்படுகின்றனர்.




***வரைபடம்: 01***


### *1.2. பங்குதாரர்களின் வயது மட்டம்*

தரவு வழங்குனர்களின் வயதை நோக்கும் 45% ஆன பங்கேற்பாளர்கள் *41* வயதிற்கு மேற்பட்டவர்களாகவும், 30% ஆனவர்கள் *31-40* வயதிற்கிடைப்பட்டவர்களாகவும், 25% ஆனவர்கள் *21-30* வயதிற்கு இடைப்பட்டவர்களாகவும் காணப்படுகின்றனர்.




***வரைபடம்: 02***

### *1.3.* பங்குதாரர்களின் தொழில் தகைமை





***வரைபடம்: 03***

தரவு வழங்குனரின் தொழில் நிலையினை அவதானிக்கும் போது ஆசிரியர்கள் மற்றும் பல்கழைக்கழக முஸ்லிம் மாணவர்கள் பெரும்பான்மையானவர்களாகக் காணப்படுவதுடன் அபிவிருத்தி உத்தியோகத்தர்கள், காதி நீதிபதிகள் சட்டத்தரணிகள், பல்கலைக்கழக விரிவுரையாளர்கள், அதிபர்கள், வைத்தியர்கள், ஆலிம்கள் மற்றும் முகாமையாளர்கள் என்ற ஒழுங்கில் காணப்படுகின்றது.

### *2.* இலங்கை முஸ்லிம் விவாக மற்றும் விவாகரத்து சட்ட மறுசீரமைப்பு குறித்து முஸ்லிம் சமூகத்தின் கருத்துநிலை

### *2.1.* காதி நீதிபதிகளின் தகைமை


காதி நீதிமன்றங்களில் நியமணம் பெறும் காதி நீதிபதிகளுக்குரிய கல்வித் தகைமைகள் ஆஆனுயு சட்டசீர்திருத்தத்தில் உள்வாங்கப்படல் வேண்டும் என்ற கருத்தில் 94.3%ஆனவர்கள் உடன்பாட்டிலும், 1.3%ஆன பங்கேற்பாளர்கள் இக்கருத்தில் உடன்பாடற்ற நிலையிலும், 4.4% ஆனோர் இத்தகைய தேவையின் நடைமுறைச் செயலாக்கத்தைப் பற்றிய உடன்பாடு அல்லது உடன்பாடற்ற நிலையிலும் காணப்படுகின்றனர். எனவே, முஸ்லிம் விவாக மற்றும் விவாகரத்து சட்டத்தின் கட்டமைப்பிற்குள் நீதியை திறம்பட நிலைநிறுத்துவதற்குத் தேவையான தகுதிகளை காதி நீதிபதிகள் பெற்றிருப்பதன் முக்கியத்துவத்தை உடன்பாடான முடிவுகள் பிரஸ்தாபிக்கின்றன. இதனை பின்வரும் வரைபின் மூலம் அறியலாம்.




***வரைபடம்: 04***

## 2.2. பாலின பாகுபாட்டை நீக்கி பெண் காதிகளை நியமணம் செய்தல்


பாலின பாகுபாட்டை நீக்கி இலங்கையிலுள்ள காதி நீதிமன்றங்களில் பெண்களை நீதிபதிகளாக நியமிக்கும் கருத்து தொடர்பில் 42% நபர்கள் உடன்பட்டுள்ளனர். இந்நிலையானது நீதித்துறையில் பாலின சமத்துவத்திற்கான கணிசமான ஆதரவைக் குறிப்பதுடன் சட்ட முடிவெடுக்கும் பாத்திரங்களில் பெண்களை உள்ளடக்குதல் மற்றும் காதி நீதிமன்றங்களில் அவர்களின் பிரதிநிதித்துவத்தை அங்கீகரிப்பதன் முக்கியத்துவத்தையும் பரிந்துரை செய்கிறது. மறுபுறம், 38% ஆன பங்கேற்பாளர்கள் இக்கருத்துடன் உடன்பாடற்ற நிலையிலும், 20% ஆனவர்கள் இது தொடர்பில் உடன்பாடு அல்லது உடன்பாடற்ற தன்மையையும் கொண்டுள்ளனர். இதனை பின்வரும் வரைபின் மூலம் விளங்கலாம்.




**வரைபடம்: 05**

## 2.3. பெண் காதி நியமணம்


இலங்கை சிறுபான்மை சூழலில் பெண் காதி நீதிபதிகளை நியமித்தல் வேண்டும் என்ற கருத்து தொடர்பில், 46.49% உடன்பாடும் 26.75% உடன்பாடின்மையும் 26.75% உடன்பாடு/உடன்பாடில்லை என்ற கருத்தும் காணப்படுகின்றன. எனவே ஒப்பீட்டளவில் அவதானிக்கும் 46.49மூ பெரும்பான்மையினர் மத்தியில் உடன்பாடான கருத்து காணப்படுகின்றது. எனவே, சமூகத்தில் பாலின வேறுபாடுகளின்றி நீதியை ஊக்குவிப்பதில் பெண் காதிகளின் சாத்தியமான பங்கேற்பிற்கு ஒப்புதல் அளிக்கப்பட்டுள்ளமையை பின்வரும் வரைபினூடாக அறியலாம்




**வரைபடம்: 06**

**2.4. சர்வதேச திருமண வயதிற்கு ஒத்த திருமண வயது நிர்ணயம்**


சர்வதேச நாடுகளில் நடைமுறையில் உள்ள முஸ்லிம் திருமண வயதிற்கு ஒத்த திருமண வயதை ஆஆனுயு சட்டத்தில் நிர்ணயிப்பது குறித்த கருத்தில், 38% பதில்கள் உடன்பாட்டைக் கொண்டுள்ளன. இந்நிலையானது சர்வதேச நெறிமுறைகளை நிலைநிறுத்துவதற்கும் பின்பற்றுவதற்கும் உலகளாவிய நடைமுறைகளுடன் திருமண வயதுச் சட்டங்களை ஒத்திசைப்பதற்கான அவசியப்பாட்டை வெளிப்படுத்துகிறது. இருப்பினும், 35%ஆன பதில்கள் இக்கருத்துடன் உடன்படாத நிலையிலும் 27% உடன்படவுமில்லை/ மறுக்கவுமில்லை என்ற நிலையிலும் காணப்படுகின்றன. ஒப்பீட்டளவில் திருமணச் சட்டங்களை சர்வதேச விதிமுறைகளுடன் சீரமைக்க விரும்பும் கருத்தாய்வுக்கு பெரும்பான்மையானவர்கள் ஆதரவு அளித்துள்ளனர். இதனை பின்வரும் வரைபின் மூலம் விளங்கலாம்.




**வரைபடம்: 07**

**3.5. திருமண வயது வரையறுக்கப்படாமையானது சிறுவர் உரிமை மீறல்களுக்கு வழியமைத்துள்ளது**

முஸ்லிம் விவாக மற்றும் விவாகரத்துச் சட்டத்தில் (MMDA) திருமண வயது நிர்ணயிக்காமை சிறுவர் உரிமை மீறல்களுக்கு வழியமைத்துள்ளது எனும் கருத்தில் 47% உடன்பாடும் 30% உடன்படவுமில்லை/மறுக்கவுமில்லை என்ற கருத்து நிலையும் 23% உடன்பாடின்மையும் காணப்படுகிறது. இதனை பின்வரும் வரைபின் மூலம் விளங்கலாம்.





**வரைபடம்: 08**

எனவே, MMDA சட்டத்தில் திருமணத்திற்கான குறைந்தபட்ச வயதுத் தேவை இல்லாததால் உருவாகும் குழந்தை உரிமை மீறல்கள் குறித்து பதிலளித்தவர்களிடையே குறிப்பிடத்தக்க ஒருமித்த கருத்துத் தேர்வுகள் இருப்பதைத் தரவு சுட்டிக்காட்டுகின்றது.

இலங்கையில் நடைமுறையிலுள்ள முஸ்லிம் தனியார் சட்டத்தின் கீழ் குறிப்பாக முஸ்லிம் விவாக மற்றும் விவாகரத்துச் சட்டத்தில் திருமணத்திற்கான ஆகக் குறைந்த வயதெல்லை தெளிவாக வரையறுக்கப்படவில்லை. நாட்டிலுள்ள பொதுச் சட்டத்தில் ஆண்-பெண் இருபாலாருக்குமான ஆகக் குறைந்த வயதெல்லையாக பதினெட்டு நிர்ணயிக்கப்பட்டுள்ளது. விவாக விகாகரத்து சட்டத்தின் 23 ஆம் பிரிவு பின்வருமாறு கூறுகின்றது. காதி ஒருவரின் அனுமதியின்றி 12 வயதுக்குக் குறைவான சிறுமியை திருமணம் முடித்தால் அத்திருமணத்தை பதிவு செய்யவும் முடியாது

### 2.5. வழக்காறு மற்றும் இஸ்லாமிய ஷரிஆ சட்டத்தை அடிப்படையாகக் கொண்ட வயது நிர்ணயம்

இஸ்லாமிய ஷரிஆ சட்டம் மற்றும் இலங்கை வாழ் முஸ்லிம்களின் வழக்காற்று நடைமுறைகளின் அடிப்படையில் திருமண வயதை வரையறை செய்யத் தேவையில்லை என்ற கருத்தில் 42% ஆனவர்கள் உடன்பாட்டையும், 30% உடன்பாடின்மையையும் 28% ஆனவர்கள் உடன்பாடு அல்லது உடன்பாடற்ற நிலையிலும் காணப்படுகின்றனர். ஒப்பீட்டளவில் பெரும்பாலான கருத்துத் தேர்வுகள் உடன்பாட்டைக் கொண்டுள்ளன. எனவே இந்நிலையானது இஸ்லாமிய சட்ட வரம்புகள் மற்றும் வழக்காற்று சட்டங்களுடன் கூடிய வயது நிர்ணயம் அவசியமற்றது எனும் கருத்தை வலுப்படுத்தி நிற்கிறது. இதனை பின்வருமாறு அறியலாம்.





***வரைபடம்: 09***

### 2.6. தாபரிப்பு மற்றும் விவாகரத்து இழப்பீடு (மதா)

கணவனால் விவாகரத்துச் செய்யப்பட்ட ஒரு மனைவிக்கு அவளது பொருளாதார செலவீனங்களையும் ஜீவனோபாயத்தையும் கவனத்திற் கொண்டு கணவனால் வழங்கப்படும் ஒரு வாழ்வாதாரத் தொகையே பொதுவாக மதாஉ எனப்படுகின்றது. இதை இஸ்லாமிய சட்டவியலாளர்கள் மனைவிக்கு


கணவனால் வழங்கப்படும் இழப்பீட்டுத் தொகை அல்லது ஜீவனாம்சத்தொகை என்று அழைக்கின்றனர். எனினும் இது குறித்த தெளிவான சட்டவிதிகள் 1951ன் முஸ்லிம் விவாக விவாகரத்துச் சட்டத்தில் உள்ளடக்கப்படவில்லை. விவாகரத்தான பெண்ணின் மதா குறித்த உரிமைகளை நிர்ணயம் செய்ய MMDA சட்டத்தில் புதிய மாற்றங்கள் ஏற்படுத்தப்பட வேண்டும் என்ற கருத்தில் 92% ஆனவர்கள் உடன்பாட்டிலும் 2% உடன்படாத நிலையிலும், 6%ஆனவர்கள் உடன்பாடோ அல்லது உடன்பாடற்ற நிலையிலும் காணப்படுகின்றனர். ஒப்பீட்டளவில் அவதானிக்கும் போது உடன்பாடான கருத்துத் தேர்வு அதிக சதவீதத்தைப் பெற்றுள்ளன. எனவே, விவாகரத்து தீர்வுகளில் பெண்களின் நிதிசார் நலனை உறுதி செய்வதன் முக்கியத்துவம் தரவுப் பெறுபேறுகளில் பிரதிபலிக்கப்பட்டுள்ளதை பின்வரும் வரைபடத்தின் மூலம் விளங்கிக்கொள்ளலாம்.




***வரைபடம்: 10***

**2.7. தாபரிப்பு உரிமையில் கணவனின் வறுமான நிலையை கருத்திற் கொள்ளல்**


விவாகரத்தான பெண்ணின் தபாரிப்பைத் தீர்மானிக்கும் போது கணவனின் தற்போதைய வறுமான நிலையை சட்டத்தில் உறுதிப்படுத்த வேண்டும் என்ற கருத்தில் 87% உடன்பாட்டையும், 7% உடன்பாடு அல்லது உடன்பாடற்ற நிலையையும், 6% உடன்பாடற்ற நிலையையும் அவதானிக்க முடிகிறது. ஒப்பீட்டுரீதியில் (87%) பெரும்பான்மையானோர் உடன்பாடுடைய நிலையில் காணப்படுவதை பின்வரும் வரைபடத்தின் மூலம் விளங்கிக்கொள்ளலாம்.




***வரைபடம்: 11***

### 2.8. நிலுவைத்தாபரிப்பு மற்றும் பிந்திய மஹரைப் பெறுவதற்கான உரிமை

நிலுவைத் தாபரிப்பு மற்றும் காலதாமதமான மஹரை விவாகரத்தின் போதான இழப்பீடாக சட்டத்தில் பதிவு செய்தல் வேண்டும் என்ற கருத்தில் 84% உடன்பாடும், 13% உடன்படுகிறேன் அல்லது உடன்படவில்லை என்ற கருத்திலும், 3% உடன்படாத நிலையிலும் காணப்படுகின்றனர். இதனை பின்வரும் வரைபடத்தின் மூலம் விளங்கிக்கொள்ளலாம்.





***வரைபடம்: 12***

எனவே, விவாகரத்தின் போதான இழப்பீடாக மஹரை சட்டப்பூர்வமாக அங்கீகரிப்பதுடன் காலத்தால் பிந்திய தாபரிப்பை பெறுவதற்கான சட்ட மாற்றங்களை அங்கீகரித்தல் தொடர்பில் வலுவான கருத்து நிலவுவதை தரவுகள் எடுத்துரைக்கின்றன. இவ்விடயம் விவாகரத்து செய்யப்பட்ட பெண்களின் நிதி உரிமைகள் மற்றும் முஸ்லிம் குடும்ப சட்ட கட்டமைப்பிற்குள் அவர்களின் பாதுகாப்பை உறுதி செய்வதன் முக்கியத்துவம் பற்றிய பரவலான ஒப்புதலைப் பிரதிபலிக்கின்றது.

### 2.9. திருமணப் பதிவை கட்டாயாக்குதல்


திருமணங்களை கட்டாயமாக பதிவு செய்வதுடன் பதிவு செய்யப்படாத திருமணங்களக்கு எதிராக போது தண்டப் பணம் அறவிடுதல் வேண்டும் என்ற கருத்து தொடர்பில் 76% உடன்பாடும், 15% உடன்படவுமில்லை மறுக்கவுமில்லை என்ற கருத்திலும், உடன்படாத கருத்தில் 9% ஆனவர்களும் உள்ளனர். எனவே, சட்டப்பூர்வ பதிவு மூலம் திருமணங்களை முறைப்படுத்துவதன் முக்கியத்துவத்தை தரவு வெளிப்படுத்துகிறது.




***வரைபடம் 13***

### *2.10. கைக்கூலி குறித்த சட்ட விதியை நீக்குதல்*


தற்போதைய முஸ்லிம் விவாகப் பதிவில் காணப்படும் கைக்கூலி தொடர்பான சட்ட விதியை அகற்றுதல் வேண்டும் என்ற விடயத்தில் 78%ஆன உடன்பாடும் 11.2% உடன்படவுமில்லை மறுக்கவுமில்லை என்ற கருத்தும் 10.8% உடன்படாத கருத்து நிலையும் காணப்படுகின்றது. ஒப்பீட்டளவில் நோக்கும் போது கைக்கூலியை திருமணப் பதிவிலிருந்து அகற்றுதல் வேண்டும் என்பதில் அதிகமான ஒப்புதல் காணப்படுவதை தரவுப் பெறுபேறுகள் முன்வைக்கின்றன.




***வரைபடம் 15***

### *2.11. திருமணப் பதிவில் மணப் பெண்ணின் ஒப்பம் பெறுதல்*


திருமணப் பதிவில் மணப் பெண்ணின் ஒப்பம் பெறுவதை சட்டத்தில் உறுதி செய்ய வேண்டும் என்ற கருத்தில் 75% பெரும்பான்மையினர் உடன்படுகின்றனர். இக்கருத்தானது திருமணச் செயல்பாட்டில் மணமகளின் சுயாட்சியை உறுதி செய்வதன் முக்கியத்துவத்தை எடுத்துக்காட்டுகிறது. இருப்பினும், குறிப்பிடத்தக்க 13% விகிதாசாரம் இந்தக் கருத்துடன் உடன்படாத நிலையிலும், திருமணப் பதிவில் மணப்பெண்ணின் சம்மதம் தேவை என்ற விடயத்தில் 12% கருத்துக்கள் உடன்பாட்டையும் அல்லது உடன்பாடின்மையையும் பெற்றுள்ளன. இதனை பின்வருமாறு அறியலாம்.




***வரைபடம் 14***

### 2.12. திருமணத்தில் பெண்ணின் சம்மதம் பெறுதல்


திருமண நிகழ்வில் மணப்பெண்ணின் சம்மதம் பெறுவதை உறுதி செய்தல் வேண்டும் என்ற கருத்துக் கணிப்பில் 82% உடன்பாடும், 8% உடன்படவுமில்லை மறுக்கவுமில்லை என்ற நிலையும் 10% உடன்படாத கருத்து நிலையும் காணப்படுகின்றது. இதனை பின்வரும் வரைபின் ஊடாக பின்வருமாறு அறியலாம்.




**வரைபடம் 16**

### 2.13. பெண்ணின் சம்மதத்திற்கு எதிரான திருமணத்தை வலிதற்றதாக்குதல்


மணப் பெண்ணின் சம்மதத்திற்கு எதிராக நடைபெறும் திருமணத்தை வலிதற்றதாக்குவதுடன் குறித்த வலிக்கு எதிராக சட்ட ரீதியிலான நடவடிக்கைகள் மேற்கொள்ளப்படல் வேண்டும் என்ற கருத்தில் 75% உடன்பாடும், 16% உடன்படவுமில்லை மறுக்கவுமில்லை என்ற தன்மையும், 9% உடன்படாத நிலையும் காணப்படுகின்றது. ஒட்டுமொத்தமாக, சமகால சட்ட விதிமுறைகள் மற்றும் மதிப்புகளுடன் கூடிய திருமணப் பதிவு செயல்முறைகளை சீரமைப்பதன் முக்கியத்துவத்தை தரவு அடிக்கோடிட்டுக் காட்டுகிறது.




**வரைபடம் 17**

### 2.14. திருமணப்பதிவில் பெண்ணின் சம்மதத்தை உறுதிப்படுத்தும் சட்ட விதியை இணைத்தல்


திருமணம் ஓர் ஒப்பந்தம் என்ற வகையில் அதற்கு இரு தரப்பினரதும் சம்மதம் அவசியம். இலங்கை முஸ்லிம் விவாக மற்றும் விவாகரத்துச் சட்டத்தின் படி மணப்பெண்ணின் சம்மதமானது வலிதாரரின் ஊடாக தெரிவிக்கப்படும் என குறிக்கப்பட்டுள்ளது. இங்கு வலிதாரர் எனும்போது 'ாபிஈ பிரிவின் கீழ் தந்தையையும் தந்தை வழி பாட்டனையும் குறிக்கின்றது. திருமணப் பதிவில் பெண்ணின் சம்மதத்தை உறுதிப்படுத்தும் பகுதியை இணைத்தல் வேண்டும் என்பதில் 53% உடன்பாடும், 24% உடன்படவுமில்லை மறுக்கவுமில்லை என்ற நிலையும் 23% உடன்பாடற்ற நிலையும் காணப்படுகின்றது. இதனைப் பின்வருமாறு அறியலாம்.




**வரைபடம் 18**

### 2.15. திருமணத்தில் வலிதாரருக்கு வழங்கப்பட்டுள்ள உச்ச அதிகாரத்தை மட்டுப்படுத்தல்

திருமணப் பாதுகாவலருக்கு வழங்கப்பட்டுள்ள உச்ச அதிகாரத்தை சட்ட ரீதியில் மட்டுப்படுத்தல் வேண்டும் என்ற கருத்தில் 54% உடன்பாடும் 21% உடன்படவுமில்லை மறுக்கவுமில்லை என்ற நிலையும் 25% உடன்படவில்லை என்ற நிலையும் காணப்படுகின்றது. இதனைப் பின்வருமாறு அறியலாம்.





**வரைபடம் 19**

எனினும் இலங்கை முஸ்லிம் விவாக விவாகரத்துச் சட்டம் 1951இன் பிரிவு 25 (1)இல் குறிப்பிடப்படுவதாவது, ஒரு முஸ்லிமின் திருமணத்திற்கு வலிதாரர் தேவையாகும். வலி நியாயமின்றி மறுத்தால் அவரை விசாரித்து காழியே திருமணத்தை நடாத்தி வைக்கலாம் என்கிறது.

### 2.16. பெண் தனக்கு ஏற்ற நபரை வலியாக நியமித்தல்


ஒரு மணப்பெண் தனக்கு ஏற்ற ஒருவரை திருமண முகவராக நியமிக்க சட்டத்தில் முழுமையான அதிகாரம் வழங்குதல் வேண்டும் என்ற கருத்தில் 39% பெரும்பான்மையானவர்கள் உடன்பாடற்ற நிலையிலும் 24% இக்கருத்தில் நிச்சயமற்ற நிலையிலும் 37% உடன்பாடான நிலையிலும் காணப்படுகின்றனர்.




**வரைபடம் 20**

### 2.17. பெண் வலிதாரராகச் செயற்படல்

ஒரு பெண் மற்றொரு பெண்ணுக்கு திருமணப் பாதுகாவலராக செயற்பட சட்ட அனுமதி வழங்கலாம் என்ற கருத்தில் 45% உடன்பாடற்ற நிலையும், 29% உடன்படவுமில்லை மறுக்கவுமில்லை என்ற நிச்சயமற்ற தன்மையும் 23% உடன்பாடான நிலையும் காணப்படுகின்றது. ஒப்பீட்டளவில் உடன்பாடாற்ற கருத்துக்கள் அதிக பிரதிநிதித்துவத்தைப் பெற்றுள்ளன. இதனை பின்வரும்




வரைபின் மூலம் விளங்கிக் கொள்ளலாம்.


**வரைபடம் 21**

எனவே, முஸ்லிம் திருமணங்களில் பெண் தான் விரும்பிய ஒருவரை வலியாக நியமித்தல் என்ற கருத்தில் ஒருமித்த கருத்தின்மையும காணப்படுகிறது. எனவே, இலங்கை முஸ்லிம் சமூகத்தில் திருமணப் பாதுகாவலராக பணியாற்றுவதற்கு ஆண்கள் பொருத்தமானவர்களாக கருதப்படுவதையும் அறிய முடிகிறது.

### 2.18. முஸ்லிம்களுக்கான தனியான காதி நீதிமன்றங்கள்

1929 இல் அரசு ஏற்றுக் கொண்ட விவாக விவாகரத்து, பதிவுக் கட்டளைச் சட்டத்தின் பிரகாரம் காதி நியமனங்களை மேற்கொள்வதற்கு சட்டத்தில் இடமளிக்கப்பட்டது. அதன்படி முஸ்லிம் விவாக விவாகரத்துச் சட்டத்தை நிர்வகிக்க காதி நீதிமன்ற முறைமை நிறுவப்பட்டது. சுதந்திரத்திற்குப் பின்னர் 1951 ஆம் ஆண்டில் பாராளுமன்றத்தில் அங்கீகரிக்கப்பட்டு 1954 ஆம் ஆண்டிலிருந்து அமுலில் உள்ள தனியார் சட்டத்திலும் காதி நியமனங்கள் தொடர்ச்சியாக இடம் பெற்று வருகின்றன.


இலங்கை முஸ்லிம்களுக்கான தனியான காதி நீதிமன்ற அமைப்பு காணப்பட வேண்டும் எனும் கருத்து தொடர்பில் பெரும்பாலான பகுதியினர் 88% உடன்பாட்டைக் கொண்டுள்ளனர். எனினும் 5% கருத்துக்கள் உடன்படாத நிலையிலும், 7% உடன்படவுமில்லை மறுக்கவுமில்லை என்ற கருத்து நிலையிலும் காணப்படுகிறது. ஒப்பீட்டளவில் பெரும்பாலானவர்கள் இக் கருத்தில் உடன்பாட்டைக் கெண்டுள்ளதால் இலங்கையின் நீதித்துறை அமைப்பில் காதி நீதிமன்றங்களின் பொருத்தம் அல்லது அவசியத்தைப் பற்றி சமூகத்தில் உள்ள ஒருமித்த கருத்து பிரதிபலிக்கப்பட்டுள்ளது. எனவே, நீதித்துறை மற்றும் முடிவெடுக்கும் செயல்பாட்டில் முஸ்லிம்களுக்கான தனி நீதிமன்றங்கள் அமைவதன் முக்கியத்துவத்தை தரவு வலியுறுத்துகிறது. அதனைப் பின்வருமாறு அறியலாம்.




**வரைபடம் 22**

தற்போது இலங்கையில் காணப்படும் காதி நீதிமன்றங்களை முற்றாக நீக்கிவிட்டு மாவட்ட நீதிமன்றங்களிள்ன கீழ் முஸ்லிம்களது குடும்ப சட்ட விவகாரங்களைக் கொண்டு வருதல் வேண்டும் என்ற கருத்தில் 50% உடன்பாடற்ற கருத்து நிலையும் 26% உடன்பாடான கருத்தும் 24%


உடன்பாடு அல்லது உடன்பாடற்ற நிலையும் காணப்படுகின்றது. இதனை பின்வரும் வரைபடத்தின் மூலம் விளங்கிக் கொள்ளலாம்




***வரைபடம் 23***

## ***2.19. காதி நீதிமன்றம் மற்றும் காதிகள் சபையில் பெண் ஆலோசகர் நியமணம்***


காதி நீதிமன்றம் அல்லது காதிகள் சபையில் நீதித்துறை ஆலோசகர்களாக பெண்களை நியமித்தல் வேண்டும் என்ற கருத்தில் 42% ஆன உடன்பாட்டைக் காண முடிகிறது. எனினும் 39% உடன்பாடற்ற கருத்தும் 19% சதவீதத்தினர் மத்தியில் நிச்சயமற்ற தன்மையும் காணப்படுகின்றது. எனவே குவாஸி நீதித்துறை பதவிகளில் பெண்களின் பங்கு குறித்து சமூகத்தில் உள்ள கருத்து வேறுபாடுகளை தரவு குறிக்கிறது. எனினும் நீதித்துறையில் பெண்களின் பிரதிநிதித்துவத்தை உறுதி செய்யும் ஆதரவான கருத்துக்கள் அதிகம் காணப்படுவதை பின்வரும் வரைபடத்தின் மூலம் அறியலாம்.




***வரைபடம் 24***


### 2.20. முஸ்லிம் தனியார் சட்டத்தில் குறித்த ஒரு மத்ஹபை மட்டும் பிரதிநிதித்துவப்படுத்தல்

முஸ்லிம் குடும்ப சட்ட அமைப்பில் குறித்த ஒரு மத்ஹபை மாத்திரம் பிரதிநிதித்துவப்படுத்தி சட்ட மாற்றங்கள் ஏற்படுத்தப்படல் வேண்டும் என்ற கருத்தில் 39% உடன்பாடான கருத்துக்களும் 29% உடன்பாடற்ற கருத்தும் 32% நிச்சயமற்ற தன்மையும் காணப்படுகின்றது. எனினும் ஒப்பீட்டளவில் நோக்கும் போது உடன்பாடான கருத்துத் தெரிவுகள் அதிகம் காணப்படுவதை அறிய முடிகிறது. இதனை பின்வருமாறு விளங்கிக் கொள்ளலாம்.




*வரைபடம் 25*


### 2.21. முஸ்லிம் தனியார் சட்ட திருத்தத்தில் ஷாபிஈ மத்ஹபை மட்டும் கருத்திற் கொள்ளல்




*வரைபடம் 26*

இஸ்லாமிய சட்ட அறிஞர்கள் இஜ்திஹாத் செய்து பெற்ற சட்டத் தீர்ப்புக்கள் அல்லது சட்ட விளக்கங்களின் தொகுப்பே மத்ஹப் எனப்படுகின்றது. முஸ்லிம் விவாக மற்றும் விவாகரத்து சட்ட சீர்திருத்தத்தின் போது ஷாபிஈ மத்ஹபின் சட்டக்கருத்துக்களை மாத்திரம் கருத்திற் கொள்ளுதல் வேண்டும் என்ற கருத்தில் 47% உடன்பாடான நிலையும் 22% உடன்பாடு அற்ற நிலையும் 31% ஆன கருத்துக்கள் நிச்சயமற்ற தன்மையிலும் காணப்படுகின்றன. எனினும் ஒப்பீட்டளவில் உடன்பாடான கருத்துத் தெரிவுகள் 47% அதிக பிரதிநிதித்துவம் பெற்றிருப்பதை அவதானிக்க முடிகிறது.

### *2.22. முஸ்லிம் தனியார் சட்ட சீர்திருத்தத்தில் ஏனைய மத்ஹப்களையும் கருத்திற் கொள்ளல்*





***வரைபடம் 27***

முஸ்லிம் விவாக மற்றும் விவாகரத்து சட்ட சீர்திருத்தத்தின் போது ஏனைய மத்ஹப்களின் சட்டக் கருத்துக்களையும் கருத்திற் கொள்ள வேண்டும் என்ற அம்சத்தில் 70% உடன்பாடான கருத்தும் 22% உடன்பாடற்ற கருத்தும் 8% நிச்சயமற்ற தன்மையும் காணப்படுகின்றது. எனினும் ஒப்பீட்டளவில் நோக்கும் முஸ்லிம் விவாக மற்றும் விவாகரத்துச் (MMDA) சட்ட சீர்திருத்தத்தின் போது ஏனைய இஸ்லாமிய சட்டச் சிந்தனைப் பள்ளிகளின் கருத்துக்களை ஏற்றுக் கொள்வதற்கான பெரும்பான்மை உடன்பாடானது, சட்டப் பன்முகத்தன்மைக்கான அங்கீகாரத்தைப் பிரதிபலிப்பதுடன், பாரம்பரியம் மற்றும் நவீனத்துவத்தை சமநிலைப்படுத்தும் சட்ட சீர்திருத்தத்திற்கான அணுகுமுறையையும் ஊக்குவிக்கிறது. இதனை பின்வரும் வரைபினூடாக அவதானிக்கலாம்.

### 2.23. பெண் காதி நியமணங்களை சில சட்ட வரம்புகளுடன் ஏற்றல்


பெண் காதி நியமணங்களை சில சட்டப் பரிந்துரைகளுடன் ஏற்றுக் கொள்ளலாம் என்ற அம்சத்தில் 51% உடன்பாடான கருத்து நிலையும் 26% உடன்பாடற்ற நிலையும் 23% நிச்சயமற்ற தன்மையும் காணப்படுகின்றது. எனினும் ஒப்பீட்டளவில் உடன்பாடான கருத்துக்கள் அதிக பிரதிநிதித்துவம் பெற்றுள்ளன. இதனை பின்வரும் வரைபின் மூலம் அறியலாம்.




***வரைபடம் 28***

### 2.24. பெண் காதி நியமணம்


காதி நீதிமன்றம் அல்லது காதிகள் சபையில் பெண்களை நீதிபதிகளாக நியமித்தல் குறித்த கருத்தில் 46% உடன்பாடான நிலையும் 24% உடன்பாடற்ற நிலையும் 30% உடன்பாடு அல்லது உடன்பாடற்ற நிலையும் காணப்படுகின்றது. எனவே, காதி நீதிமன்றங்களில் பெண்கள் நீதிபதிகளாகப் பணியாற்றுவது குறித்த பெரும்பான்மை ஒப்பந்தமானது, பாலினப் பாத்திரங்களைப் பற்றிய சமூக அணுகுமுறைகளில் குறிப்பிடத்தக்க மாற்றத்தைக் குறிக்கிறது. இது வளர்ந்து வரும் சட்ட நெறிமுறைகள், பெண்களுக்கு சட்டப்பூர்வ அதிகாரமளித்தல், சமூக முன்னேற்றம் மற்றும் சிறுபான்மை சூலழமைவில் சட்ட சீர்திருத்தக் கோரிக்கைகளுக்கான ஒரு நேர்மறையான படியை எடுத்துக்காட்டுகிறது.




*வரைபடம் 29*

### 2.25. இஸ்லாமிய சட்டத்தில் ட திகளாக நியமித்தல்

*இஸ்லாமிய சட்டத்தில் நன்கு புலமையுள்ளவர்களை காதிகளாக நியமித்தல் என்ற கருத்தில் 88% உடன்பாடான நிலையும் 3% உடன்பாடற்ற நிலையும் 9% நிச்சயமற்ற தன்மையும் காணப்படுகின்றது. எனவே, காதி நீதிமன்றங்களில் நீதிபதிகளாக பணியாற்ற தகுதிவாய்ந்த அறிவுஜீவிகளுக்கு இடமளிக்கப்பட வேண்டும் என்பதில் பெரும்பான்மையினரிடையே ஒருமித்த கருத்து காணப்படுவதானது முஸ்லிம் சமூகத்தில் நீதித்துறை சீர்திருத்தத்திற்கான முற்போக்கான மற்றும் முன்னோக்கு அணுகுமுறையை பிரதிபலிக்கிறது. இதனை பின்வரும் வரைபின் மூலம் அறியலாம்.*





**வரைபடம் 30**

*இலங்கையில் "காதி" என்பவர், 1951ம் ஆண்டின் 13ம் இலக்க முஸ்லிம் விவாக விவாகரத்துச் சட்டத்தின் 12ம் பிரிவின் படி, முஸ்லிம் தனியார் சட்டத்திலுள்ள குடும்பவியல் தொடர்பான விடயங்களை நெறிப்படுத்துவதற்காக இலங்கை நீதிச்சேவை ஆணைக்குழுவினால் நியமிக்கப்படும் நீதித்துறை அதிகாரியாவார். இவ்வாறு மிகப் பொறுப்புமிக்க பதவியை ஏற்கும் "காழி"கள் செயற்திறன்மிக்கவர்களாக, சிறந்த சமூக கட்டமைப்பை உருவாக்குபவர்களாக இருக்க வேண்டும் என சமூகம் எதிர்பார்க்கின்றது. இலங்கையில் 1951ம் ஆண்டின் விவாக, விகாரத்துச் சட்டத்தின் 13ம் இலக்கம் "காழி"யின் நியமனம்*

தொடர்பாக பிரஸ்தாபிக்கும் போது அவர்கள் நியமனம் பெறுவதற்கான தகைமைகளை விரிவாக பிரஸ்தாபிக்கவில்லை. இச்சட்டத்தின் 12ம் இலக்கம் 1ம் உட்பிரிவு "அப்பதவிக்கு திறமை வாய்ந்தவர் என வரையறை செய்கிறது. திறமை வாய்ந்தவரை வரையறை செய்வதற்கான வழிமுறைகள் வெளிப்படையாகக் குறிப்பிடப்படவில்லை.

**2.26. விவாகரத்துப் பெற்ற பெண்ணுக்கு இத்தா கால தாபரிப்பு மட்டும் போதுமானது**





***வரைபடம் 31***

முஸ்லிம் விவாக விவாக விலக்கு சட்டத்தின் பிரிவு 47 (1) இன் படி பராமரிப்புத் தொகையைக் கூட்டுவதற்கோ, குறைப்பதற்கோ காதிக்கு அதிகாரம் வழங்கப்பட்டிருக்கிறது. தலாக்கின் இத்தாவின் போதும், பிரசவத்தின்போதும் பராமரிப்பு வழங்கப்படல் வேண்டும். மனைவியின் பராமரிப்பை கணவன் தட்டிக் கழிக்கின்ற போது கணவனின் சொத்துக்களிலிருந்து வசதிகளைப் பெற்றுக் கொடுக்க சட்ட நடவடிக்கை எடுக்க முடியும்.

விவாகரத்தான முஸ்லிம் பெண்ணுக்கு இத்தா காலத்திற்கு இடைப்பட்ட தாபரிப்பு மட்டுமே போதுமானது என்ற கருத்துக்கு 75%ஆன ஆதரவு காணப்படுகின்றது. இவ்வம்சம் இலங்கை சூழலமைவில் முஸ்லிம் விவாகரத்து நடைமுறைகளைச் சுற்றியுள்ள சட்ட மரபுகளை வலுவாக பின்பற்றுவதை பிரதிபலிக்கிறது. இருப்பினும் 15% சதவீதத்தினர் உடன்பாடற்ற கருத்திலும் 10% ஆனோர் இவ்விடயத்தில் நிச்சயமற்ற தன்மையிலும் காணப்படுகின்றனர். இதனை பின்வருமாறு விளங்கிக் கொள்ளலாம்.

**2.27. விவாகரத்தான பெண் மதாவினை தொடர்ச்சியாகப் பெறல்**


ஒரு பெண் விவாகரத்துப் பெற்ற பின்னர் பெறக்கூடிய விவாகரத்து இழப்பீட்டினை சில காலங்கள் வரை அல்லது அவள் மற்றுமொரு திருமணம் முடிக்கும் வரையில் தொடர்ச்சியாகப் பெற்றுக் கொள்ளக்கூடிய சட்ட திருத்தங்களை மேற்கொள்ள வேண்டும் என்ற கருத்தில் 57% உடன்பாடான நிலையும் 27% உடன்பாடற்ற நிலையும் 16% உடன்பாடு / உடன்பாடற்ற தன்மையும் காணப்படுகின்றது. எனினும் ஒப்பீட்டளவில் 57% உடன்பாடான கருத்துக்கள் அதிக பிரதிநிதித்துவத்தைப் பெற்றுள்ளன. இதனை பின்வரும் வரைபின் மூலம் அறியலாம்.




***வரைபடம் 32***

### 2.28. பஸ்ஹ் விவாகரத்தின் போதான இழப்பீடு (மதா):


மனைவியால் முன்மொழியப்படும் பஸ்ஹ் விவாகரத்து சூழ்நிலைகளிலும் அவளுக்கான விவாகரத்து இழப்பீடு (மதா) வழங்கப்பட வேண்டும் என்ற கருத்துடன் 61% பெரும்பான்மை உடன்பாடு கொண்டுள்ளனர். விவாகரத்து போன்ற இடைக்கால காலங்களில் பெண்களுக்கு நிதி உதவியின் முக்கியத்துவத்தை இது உணர்த்துகிறது. இருப்பினும் 24% இந்த கருத்துடன் உடன்படதா நிலையிலும் குறிப்பிடத்தக்க 15% உடன்பாடு அல்லது உடன்படவில்லை என்ற நிச்சயமற்ற தன்மையிலும் காணப்படுகின்றது.



**2.29. பலதாரமணத்திற்கு இறுக்கமான சட்ட நிபந்தனைகளிடல் வேண்டும்**

*1951 ஆம் ஆண்டின் முஸ்லீம் விவாக மற்றும் விவாகரத்துச் சட்டத்தின் பிரிவுகள் 24 (1)- 24 (4) இன் கீழ் பலதாரமணம் அனுமதிக்கப்படுகிறது. அந்த வகையில் முஸ்லிமான ஆண் நான்கு பெண்கள் வரை திருமணம் செய்து கொள்ளலாம். 75% உடன்பாடான நிலையும் 15% உடன்பாடற்ற நிலையும் 10% நிச்சயமற்ற தன்மையும் காணப்படுகின்றது. எனினும் ஒப்பீட்டளவில் பெரும்பான்மையான மக்கள் பலதார மணம் தொடர்பான சட்டங்களை வலுப்படுத்துவதை ஆதரிக்கிறார்கள். இதனை பின்வரும் வரைபின் மூலம் அறியலாம்.*

***வரைபடம் 33***





***வரைபடம் 34***

*எனவே, சட்டங்களை வலுப்படுத்துவதற்கும் திருமணச் சட்டங்களின் பின்னணியில் பலதாரமண உறவுகளுக்கும் பாலின நீதிக்கும் முன்னுரிமை அளிக்கும் மாற்றத்திற்கு உடன்படும் கருத்தை தரவு பிரதிபலிக்கின்றது.*

**2.30. MMDA சட்டமும் இலங்கை முஸ்லிம்களின் தனித்துவமும்**

*முஸ்லிம் விவாகம் மற்றும் விவாகரத்து சட்டத்தின் கீழ் இலங்கை முஸ்லிம்களின் தனித்துவம் பேணப்படுகிறது என்ற கருத்து தொடர்பாக பதிலளித்தவர்களிடையே 82% உடன்பாடும், 15% உடன்படாத நிலையும், 3% உடன்பாடு / உடன்பாடு அற்ற நிலையும் காணப்படுகின்றது. இதனை பின்வரும்*



வரைபின் மூலம் அறியலாம்.


எனவே, தனிநபர்கள் தங்கள் உரிமைகளைப் பயன்படுத்தவும், அவர்களின் மத நம்பிக்கைகள் மற்றும் கலாசார நடைமுறைகளுக்கு ஏற்ப முடிவுகளை எடுக்கவும் இந்தத் தனித்துவமான சட்டக் கட்டமைப்பு முக்கியமானது.

### 2.31. முஸ்லிம் விவாக மற்றும் விவாகரத்து சட்டமும் பெண் உரிமை மீறல்களும்

தற்போதைய முஸ்லிம் விவாக மற்றும் விவாகரத்து சட்டத்தில் பெண்களின் உரிமை மீறல்களுக்கு வித்திடும் சில சட்டவிதிகள் காணப்படுகின்றன என்ற கருத்தில் 53% ஆன பெரும்பான்மையினர் உடன்பாட்டைக் கொண்டுள்ளனர். எனவே, தற்போதைய முஸ்லிம் குடும்ப சட்டக் கட்டமைப்பின் கீழ் பெண்கள் எதிர்கொள்ளும் சாத்தியமா

*வரைபடம் 35*

லது சவால்கள் பற்றிய கவலைகளை இவ்விட து. எவ்வாறாயினும், பதிலளித்தவர்களில் 14% ஆனோர் உடன்படாத நிலையிலும், 33% ஆனோர் பெண்களின் உரிமை மீறல்களின் அளவு குறித்து நிச்சயமற்ற தன்மையிலும் காணப்படுகின்றனர். எனவே, பாலினம் தொடர்பான பிரச்சனைகளை சட்டத்திற்குள் தீர்க்க வேண்டியதன் அவசியத்தை தரவுகள் வேண்டி நிற்கின்றன. இதனை பின்வரும் வரைபின் மூலம் அறியலாம்.





**வரைபடம் 36**

### 2.32. தனியார் சட்ட முரண்பாடுகளும் ஷரிஆ சட்ட விதிகளும்

தற்போதைய இலங்கை முஸ்லிம் விவாக மற்றும் விவாகரத்து சட்டத்தில் இஸ்லாமிய ஷரிஆவுடன் முரண்படும் சில சட்ட விதிகள் காணப்படுகின்றன என்ற கருத்தில் 54.15% ஆனோர் உடன்பாட்டைக் கொண்டுள்ளனர். இந்தக் கருத்தானது முஸ்லிம் தனியார் சட்டத்தின் சட்டபூர்வமான சில விதிகள் இஸ்லாமிய சட்டவியலுடன் விலகும் தன்மையைக் கொண்டிருப்பதை பிரதிபலிக்கிறது. ஒப்பீட்டளவில் அதிக சதவீதத்தினர் MMDA சட்ட விதிகளுக்கும் இஸ்லாமிய சட்டக் கோட்பாடுகளுக்கும் இடையே உள்ள

முரண்பாடுகளை உணர்வதாகத் தெரிகிறது. எவ்வாறாயினும், குறிப்பிடத்தக்க பகுதியினர் இக்கருத்தில் 27% உடன்படவுமில்லை அல்லது மறுக்கவுமில்லை என்ற கருத்திலும், 19% ஆனோர் உடன்படாத நிலையிலும் காணப்படுகின்றனர்.

எனவே பிரச்சினைகளை நிவர்த்தி செய்வதற்கும் இஸ்லாமிய மதக் கோட்பாடுகளுக்கு இணங்குவதை உறுதி செய்வதற்கும், கேள்விக்குரிய குறிப்பிட்ட விதிகளை ஆழமாக ஆராய்ந்து தெளிவுபடுத்த வேண்டியதன் அவசியத்தை இவ்விடயம் அறிவுறுத்துகிறது. இதனை பின்வரும் வரைபின் மூலம் அறியலாம்.




***வரைபடம் 37***

### 3. *முடிவுரை*

இவ்வாய்வின் பெறுபேறுகளை அவதானிக்கும் போது இலங்கை முஸ்லிம் விவாக மற்றும் விவாகரத்துச் சட்டத்தில் சீர்திருத்தங்கள் மேற்கொள்ளப்படுதல் வேண்டும் என்பது காலத்தின் தேவையாக இருப்பதை உடன்பாடான பல கருத்துக்கள் பிரதிபலித்துள்ளன. அந்தவகையில் பெண்களை காதிகளாக நியமித்தல், இஸ்லாமிய ஷரிஅத்திற்கு முரணான சட்ட விதிகளை நீக்குதல், பலதாரமணத்திற்கு இறுக்கமான சட்ட நிபந்தனைகள் இடல், திருமணப் பதிவில் பெண்ணின் கையொப்பத்தை இடும் பகுதியை இணைத்தல், கைக்கூலி தொடர்பான சட்ட விதியை நீக்குதல், பெண்களின் உரிமைகளை சவாலுக்கு உட்படுத்தும் சட்ட விதிகளை திருத்துதல், காதி நீதிமன்ற முறைமை மூலம் முஸ்லிம்களின் தனித்துவத்தைப் பேணுதல், பஸ்ஹ் விவாகரத்தின் போதும் பெண்ணுக்கு விவாகரத்து இழப்பீடு வழங்குதல், மற்றும் மதாவினை தொடர்ச்சியாகப் பெறல், தகுதியுள்ள காதிகளை காதி நீதிமன்றங்களில் நியமித்தல், பெண்களை காதிகளாக நியமிக்கும் போது சில சட்ட நிபந்தனைகளையும் மேற்கொள்ளல்,முஸ்லிம் விவாக மற்றும் விவாகரத்து சட்ட சீர்திருத்தத்தின் போது ஏனைய மத்ஹப்களின் சட்டக் கருத்துக்களையும் கருத்திற் கொள்ளல், காதி நீதிமன்றம் மற்றும் காதிகள் சபையில் பெண்

ஆலோசகர் நியமணம், திருமணத்தில் வலிதாரருக்கு வழங்கப்பட்டுள்ள உச்ச அதிகாரத்தை மட்டுப்படுத்தல், பெண்ணின் சம்மதத்திற்கு எதிரான திருமணத்தை வலிதற்றதாக்குதல், திருமணப் பதிவை கட்டாயாக்குதல், நிலுவைத்தாபரிப்பு மற்றும் பிந்திய மஹரைப் பெறுவதற்கான உரிமை, வழக்காறு மற்றும் இஸ்லாமிய ஷரிஆ சட்டத்தை அடிப்படையாகக் கொண்டும் காலசூழலுக்கு ஏற்ற வகையிலும் திருமண வயதை நிர்ணயம் செய்தல் என்பன முக்கியம் பெறுகின்றன. மேலும் ஒப்பீட்டளவில் நோக்கும் போது ஏனைய விடயங்களில் உடன்பாடற்ற கருத்துக்களும், உடன்பாடு அல்லது உடன்பாடற்ற கருத்துக்களும் மிகக் குறைவாகக் காணப்படுகின்றன.

**உசாத்துணைகள்**


றவுப் சைன். (2021). *இலங்கை முஸ்லிம் விவாக விவாகரத்துச் சட்டம் - ஓர் இஸ்லாமிய நோக்கு.* ஆய்வுக்கும் மேம்பாட்டுக்குமான இஸ்லாமிய மகளிர் ஒன்றியம். காத்தான்குடி: இலங்கை.

Chulani, Kodikara. (1999). Muslim Family Law in Sri Lanka. Colombo: MWRAF Goonesekara.

Goonesekara, G. (1980). The Legal Status of The Female In The Sri Lanka Law Of Family Relations. Gunasena.

Goonesekere, S. (2006). Family Support and Maintenance: Emerging Issues in Some Developing Countries with Mixed Jurisdictions. Family Court Review, 44(3), 361–375.

Jaldeen, M. S. (1990). The Muslim law of marriage divorce and maintenance in Sri Lanka. Famys.

Kamali, M. H. (n.d.). Islamic Family Law Reform: Problems and Prospects. ICR Journal, 3(1), 37–52. https://doi.org/10.52282/ICR.V3I1.579

Saleem, M. (2001). The Quazi court system and its impact on Muslim women. Colombo: MWRAF.

Saleem, M. (2009). Family Law of Sri Lanka. Retrieved from https://www.academia.edu.